# முனைப்பு

## சிறப்பு மலர்




## பரிசளிப்பு விழா 2011










## மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம்

# மட்/ம.மே/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம்

# பரிசளிப்பு விழா-2011

# முனைப்பு

## சிறப்பு மலர்

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்"

வெளியீடு :- மட்/ம.மே/முனைக்காடு விவே.வித்
முனைக்காடு

# நூல் தரவு

இதழின் பெயர் : முனைப்பு

வெளியீடு : மட் /ம.மே/முனைக்காடு
விவேகானந்தா வித்தியாலயம்

பதிப்பு : 2011, கார்த்திகை

பக்கம் : 32

கணணி வடிவமைப்பு : வ.துசாந்தன்

மட் /மமே /முனைக்காடு விவேகானந்த
வித்தியாலயம் நடாத்தும் பரிசளிப்பு விழா-2011 க்
குரிய சிறப்பு மலர் முனைப்பு உருவாக வாழ்த்துச் செய்திகளையும்,
ஆக்கங்களையும், விளம்பரங்களையும் அளித்து உதவி நல்கிய
அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்

-நூல் வெளியீட்டுக் குழு-

# உள்ளே....


| விடயம் | பக்கம் |
|---|---|
| பரிசளிப்பு விழாக்குழு விபரம் | 04 |
| ஆசியுரை - சிவஸ்ரீ ப.மானாகப்போடி குருக்கள் | 06 |
| வாழ்த்துச்செய்தி – கௌரவ முதலமைச்சர்-கிழக்கு மாகாணம் | 07 |
| வாழ்த்துச்செய்தி – வலயக்கல்விப்பணிப்பாளர், மட்டக்களப்பு மேற்கு | 08 |
| வாழ்த்துச்செய்தி – கோட்டக்கல்விப்பணிப்பாளர், ம.தெ.மே | 09 |
| பாடசாலைக்கீதம் | 10 |
| பாடசாலையின் தூரநோக்கு | 11 |
| அதிபர் உள்ளத்திலிருந்தும்,ஆண்டறிக்கையும் | 12 |
| பாடசாலையின் வரலாறு | 15 |
| பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள் | 17 |
| பிரதி அதிபர் உள்ளத்திலிருந்து...... | 18 |
| பரிசு பெறுவோர் விபரம் | 19 |
| நவீன கல்வி விடயங்கள் | 29 |
| நன்றியுரை | 32 |

மட்/ம.மே/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம்

நடாத்தும்

**பரிசளிப்பு விழா 2011**

30.11.2011

# விழாக்குழு

**தலைவர்**

திரு.பொ.நேசதுரை(அதிபர்)

**செயலாளர்**

திரு.பே.குமாரலிங்கம்

**பொருளாளர்**

திரு.கு.கருணைலிங்கம்

**ஒழுங்கமைப்பாளர்கள்**

திரு.மா.சத்தியநாயகம்(பிரதி அதிபர்)
திரு.அ.இராமேஸ்வரன்(ஆ.பி.ப.தலைவர்)
திருமதி.சா.பகீரதன்(இ.பி.ப.தலைவர்)

**மலர் வெளியீட்டுக்குழு**

திருமதி.கு.வசிதரன்
திருமதி.யோ.சந்திரராசு

பரிசுப் பொருட்கள் கொள்வனவு

திரு.மு.குணேசலிங்கம்
செல்வி.சீ.சோபாளினி
திரு.ச.கங்காதரன்

பரிசு ஒழுங்குபடுத்தல்

திருமதி.கு.வசிதரன்
திருமதி.தி.பிரகாஷ்
செல்வி.க.சந்திராதேவி
செல்வன்.உ.கோகுலராஜ்
திருமதி.தே.மேகலநாதன்
திரு.மு.குணேசலிங்கம்
திருமதி.ச.ஆனந்தன்

## அழைப்பிதழ்

திரு.நா.குருச்சந்திரராசா திரு.பே.குமாரலிங்கம்
செல்வன்.வ.துசாந்தன்

## சான்றிதழ் எழுதுதல்

திருமதி.இ.அம்பிகைபாகன் திருமதி.சி.றோகீஸ்வரன்
திருமதி.ப.நாகேஸ்வரன்

## புகைப்படம்

திரு.ம.அரியதாஸ் திரு.த.ஜனார்த்தனன்
திரு.அ.சுரேஸ்

## வரவேற்பு

செல்வி.வ.மங்கையர்மணி திருமதி.யோ.சந்திரராசு
திரு.ம.அரியதாஸ் திருமதி.இ.சுதாகரன்
பாடசாலை.அபி.குழு.உறுப்பினர்கள் திரு.யோ.தங்கத்துரை

## மண்டப ஒழுங்கு

திரு.சா.ஜெயராஜ் திரு.நா.குருச்சந்திரராசா
திரு.ஏ.லோகசிங்கம் திரு.சி.சத்தியவான்
பழைய.மா.ச.உறுப்பினர்கள்

## உபசரிப்பு

திரு.மா.சத்தியநாயகம் திரு.கு.கருணைலிங்கம்
திருமதி.ப.ஜெகதீசன் திருமதி.இ.சுதாகரன்
திருமதி.க.தர்மசிவம் திருமதி.பி.சிறிதர்
திருமதி.வி.போசராசா திருமதி.சி.வேல்ராஜசேகரம்
திரு.மா.பாலிப்போடி திருமதி.உ.சச்சிதானந்தம்

## நிகழ்ச்சி ஒழுங்குபடுத்தல்

திருமதி.சா.பகீரதன் திரு.அ.இராமேஸ்வரன்
திருமதி.ப.யோகராசா திருமதி.அ.காந்தராசா

திருமதி.கி.கமலேந்திரன்
திருமதி.சே.கமலநாதன்
திருமதி.வி.உதயகுமார்



# ஆசிச் செய்தி

முனைக்காடு ஸ்ரீ சித்திவிநாயகர் கண்ணகி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ப.மானாகப்போடி ஐயரவர்கள் உவந்தளித்த ஆசியுரை

"மெய்யென வாழ்வுதனை மேதியினிலே போற்றி
ஐயென உறவை நம்பி ஆழ்ந்திட்ட மாந்தர் நீயும்
பொய்யென உலக வாழ்வை போதிக்கும் கல்விதனை
கையென ஏற்றுக் கொண்டால் கவலைகள் பறந்துபோமே"

இவ்வுலகில் எல்லாச்செல்வங்களையும் தரவல்லது கல்வி. இதை ஒரு மனிதன் "கசடறக் கற்பானாகில்" உயர்வடைவான். இதிலும் கல்வியை வளர்க்க பாடுபடுவோர். அதை மனமுவந்து போதிப்போன் இவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். ஆயினும் ஆழ்ந்து கற்றால் அறிவதற்கேதுமில்லை, ஆழ்ந்து கற்றால் மூழ்கி முத்தெடுப்பது போன்று நல்ல அறிவை வெளிக்கொணரலாம்.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு அமைவாக, எதிர்க் கேள்விகளாக எம்முள் சிந்திக்க வேண்டும் ஒரு பொருளுக்கு பல கருத்துக்களை கொணர்ந்து, ஆராய்ந்து அறிவைத் தேடவேண்டும் "தாய்மொழி அறியாதவன் பிறமொழியை உணரான்" எனவே எம்மொழியை அலசி ஆராய்ந்து கற்பது நன்று. தமிழில் உள்ள குதர்க்கவாதம் , நகைச்சுவை,இலக்கியம் சாரா கவிதைகள் என்பன அவதானிக்கப்பட வேண்டியவை.

இன்றைய காலகட்டத்தில் கல்வியின் உயர்வைக் காட்டி நிற்கும் முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம், கிராமத்தின் அச்சாணியாக திகழ்கின்றது. இங்கு பல கல்விமான்கள் உருவாகிய பெருமையும் உள்ளது. இப்பாடசாலையின் சிறந்த தலைமைத்துவம் ஆளுமை,ஆற்றல் என்பன உயரிய நிலைக்கு இட்டுச் செல்வதை நான் கண்ணூடாகக் காண்கின்றேன். இதன் அதிபர், ஆசிரியர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் காட்டும் ஆர்வம் மென்மேலும் வளர்ச்சியையும் பெருமையையும் பெற்றுத்தரும், சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் இந்த வகையில் சிறந்த ஆசிரியர்கள், சாதாரணதரத்தில் சித்திபெற்றோர், புலமைப் பரீட்சையில் தேறியோர், சிறந்த மாணவர்கள் போன்றோரைக் கௌரவிப்பதில் பெருமையடைவதோடு இதற்காக முன்னின்று உழைக்கும் சகலருக்கும் எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருளாய் விளங்கும் எமது தனிப்பெரும் கருணை வள்ளல் ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமானுடைய திருவருள் கைகூடப் பிரார்த்திப்பதுடன் எனது ஆசியையும் தெரிவிக்கின்றேன்.

"தந்தையுரை தட்டினவன் தாயுரை இகழ்ந்தோன்
அந்தமுறு தேசிகர்தம் ஆணையை மறந்தோன்
சந்தமுறு வேதவிதி தாண்டிய விந் நால்வர்
செந்தழலின் வாயிடை சேர்வது மெய் கண்டீர்"

"எல்லோருக்கும் இன்புற்றிருப்பதன்றி வேறொன்றும் அறியேன் பராபரமே"

சுபமஸ்து



# வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் முனைக்காடு விவேகானந்தா பாடசாலையின் 2010, 2011ம் வருடத்தில் திறமைகளை வெளிக்காட்டிய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வின் மலர் வெளியீட்டிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதனை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இயற்கையாகவே தன்னகத்தே தன்னம்பிக்கையும், தைரியமும், கலை கலாசார விழுமியங்களையும் கொண்டுள்ள இப்பகுதி மக்களின் வாழ்க்கையில் ஒளிமயமான எதிர்கால தடம்பதிப்புக்கள் வலுவாகுவதற்கு கல்வி என்பது மிகவும் அத்தியாவசியமானதாக உள்ளது. தனிமனிதன் தனது ஆளுமையினை வளர்த்து திடமானவராக நிலைக்கும் போது அவனது குடும்பம் தலைநிமிரும். அதன்மூலம் அப் பிரதேசம், மாவட்டம், மாகாணம் சக்தி பெற்று நாடும் வளமாகும். பல சவால்களுக்கு மத்தியில் புதிதாக உருவாக்கப்பட்ட மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் விரைவில் ஏனைய கல்வி வலயங்களுடன் போட்டி போடும் நிலைக்கு தன்னை வளர்த்துக் கொள்வதற்கு முனைக்காடு விவேகானந்தா பாடசாலையின் கல்வி மற்றும் இது போன்ற சேவைகளின் வெளிப்பாடு வலுச்சேர்க்கும் என்ற நம்பிக்கை உண்டு.

சுவாமி விவேகானந்தரின் திருநாமத்தினை கொண்டுள்ள இப் பாடசாலை அவரின் திடமான சிந்தனைகளுக்கு ஏற்ப ஒழுகுவதன் மூலம் வெற்றியடைய வாழ்த்துவதுடன் கிழக்கு மாகாணசபை ஆரம்பிக்கப்பட்ட பின்பு கல்வித் துறையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுவருகின்றது. உட்கட்டமைப்புகளும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது வெளிப்படை. இதனுள் கல்வியுடன் இது போன்ற சேவைகளை வழங்கும் கல்விச் சாலைகள் மூலம் மனிதத்துவம் மாணவர்கள் மத்தியில் விதைக்கப்படவேண்டும். யுத்தம் அனர்த்தங்கள் என்று காரண சாட்டுக்கள் காட்டப்பட்டு கல்வி, கலை, கலாசார, பொருளாதாரத்தில் பின்னடைவுகளை கண்டுவந்தோம். உலகம் கணணி மயப்படுத்தப்பட்டு மிகவேகமாக மாறிக்கொண்டிருக்கின்றது. இதற்கு ஏற்றாற் போல் எம் மாணவர்களும் துரிதமானவர்களாக மாற்றப்படவேண்டும். தொழிலுக்கான கல்விகளுடன் வாழ்க்கைக்கான கல்வியும் புகட்டப்படவேண்டும். மாணவர்களின் ஆற்றல்களுக்கு ஏற்ப அவர்களை நெறிப்படுத்துவதற்கு ஆசிரியர்களும் தயார்படுத்தல்களுடன் நெறிப்படுத்துவதற்கு ஆசிரியர்களும் தயார்படுத்தல்களுடன் ஒன்றிணைந்து செயலாற்றுவோம்.

ஒரு பாடசாலை மிக வேகமான வளர்ச்சி காணவேண்டுமானால் அதிபர் ஆசிரியர் மாணவர்களுடன் புறச்சூழல்களும் சமூகமும் ஒன்றிணைந்து பயனளிக்க வேண்டும். இப் பாடசாலையின் ஒன்றிப்பும், அர்ப்பணிப்பும் மேலோங்கி காணப்படுகின்றது. இன் நிலை தொடர்ந்து கல்விக்கு தங்கள் பணி சிறக்கவும் இவ்வாறான பாராட்டு நிகழ்வுகள் மாணவர்களுக்கு புது உத்வேகத்தினைக் கொடுக்கும் என்ற நம்பிக்கையுடன் இன் நிகழ்வை ஏற்பாடு செய்த அனைவரையும் பாராட்டி கிழக்கு மாகாண முதலமைச்சர் என்ற வகையிலும் இப்பகுதியை நன்கு தெரிந்தவகையில் எமது பூரண ஆதரவு தங்களது உத்வேக செயலாற்றல்களுக்கு என்றும் உறுதுணையாக அமையும் என சான்று பகர்கின்றோம்.

மக்கள் சேவையில்...

சி.சந்திரகாந்தன்,
கிழக்கு மாகாண முதலமைச்சர்.



# வாழ்த்துச் செய்தி

மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம் தமது மாணவர்களின் திறமைகளைக் கௌரவிக்கும் இப்பரிசளிப்பு விழாவினை நடாத்துவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்று மாணவர்களானாலும் சரி, ஆசிரியர்களானாலும் சரி அல்லது வேறு எந்த துறையைச் சார்ந்தவர்களானாலும் சரி அவர்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டியவர்களாக உள்ளனர் இதனை கல்வி உளவியலாளரான மாஸ்லோ அவர்கள் தேவைகளைப்பற்றிக் கூறி, அதிலும் கணிப்புத் தேவை பற்றிக்குறிப்பிடுவதை நாம் காண்கின்றோம்.

தாய் குழந்தையை ஈன்றது முதல் இந்தப்பாராட்டுக்கள் தாலாட்டுக்களாக குழந்தைகளுக்கு கிடைக்கப் பெறுவதை நாம் அறியாதவர்களல்லர். தொடர்ந்து மனிதனின் வாழ்க்கை வட்டத்தின் ஒவ்வொரு பருவத்திலும் இது கிடைக்கப் பெறுகின்றது. இவ்வாறான நிகழ்வுகள் மனிதனுக்கு ஒரு கணிப்பினை வழங்கி அவனை ஊக்கப்படுத்துவதையும் இது ஏனையோருக்கு ஒரு முன்னுதாரணமாகவும், படிப்பினையாகவும் இருப்பதைக் காணலாம்.

அந்த வகையில் இப்பரிசளிப்பு விழாவானது மாணவர்களை ஊக்கப்படுத்தவும், ஏனைய மாணவர்களை நல்வழிக்குக் கொண்டு வர உதவுவதுடன், சாதனை படைத்த மாணவர்களின் திறமைகளை ஏனைய மாணவர்கள், பெற்றோர்கள் பாராட்டும் ஒரு நற்பண்பினையும் வளர்க்க உதவும் என்பதுடன் பாராட்டுப் பெறும் மாணவர்களையும் பாராட்டை வழங்கும் மாணவர்களையும், பாடசாலை சமுகத்தையும் வாழ்த்தி விழா சிறப்புற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து விடை பெறுகின்றேன்.

திரு.க.பாஸ்கரன்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
மட்டக்களப்பு மேற்கு.

# வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள ஐந்து வலயங்களில் ஒன்றான மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் மண்முனை தென்மேற்கு கோட்டத்தில் அமைந்துள்ள 1C பாடசாலைகளில் மட் முனைக்காடு விவேகானந்த வித்தியாலயமும் ஒன்றாகும். இவ்வித்தியாலத்தில் வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

இவ் வித்தியாலயமானது கடந்த காலங்களில் 3ம் தர பாடசாலையாக இருந்து படிப்படியாக செயற்றிறன் மிக்க பாடசாலை நிருவாகத்தினாலும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும் விடாமுயற்சியினால் தரம் ii க்கு தரமுயர்த்தப்பட்டு பின்னர், இவ்வாண்டு முதல் 1C பாடசாலையாக மேலும் தரமுயர்த்தப்பட்டுள்ளது. இவ்வித்தியாலயமானது எதிர்காலத்தில் தரம் $1^{AB}$ பாடசாலையாக தரமுயர்த்தப்பட வேண்டும் என்பது எமது அவா. இவ்வாறு இப்பாடசாலை தரமுயர்த்தப்பட வேண்டுமாயின், இவ்வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையிலும், க.பொ.த சாதாரணதர பரீட்சையிலும், பல சாதனைகள் படைக்க வேண்டும். அதுபோலவே, இவ்வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்கள் சாதனைகள் பல படைக்க தூண்டு கோலகாக இருந்து தடம் பதிக்க வேண்டும். இவ்விரண்டு முயற்சியினால் மிக விரைவாக பாடசாலை மேலும் தரமுயர வாய்ப்பு ஏற்படுவதுடன், இவ்வித்தியாலயத்தின் புகழ் மென்மேலும் வளர்ந்தோங்குவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

இன்றைய மாணவர்கள் நாளைய சக்திமிக்க தலைவர்கள், இவர்கள் இன்று பாடசாலையில் பராமரிக்கப்படும் தன்மைக்கு ஏற்பவே நாளை உவப்பான பிரதிபலிப்பை வெளிக்காட்ட முடியும். கல்வி கற்கின்ற மாணவர்களும், சிறப்பிக்கின்ற அல்லது வழிகாட்டுகின்ற ஆசிரியர்களும் இக்கருமத் தொடரின் ஆணிவேர்கள். இவ்விரு தரப்பினரதும் திருப்தியும், மகிழ்ச்சியுமே தரமான கல்விக்கு வித்திடுகின்றது.

இவ்வாறான பரிசளிப்பு விழாக்களை நடாத்துவதன் மூலம் சாதனைகள் படைத்த ஆசிரியர்கள், மாணவர்கள், சமூகத்தின் பார்வைக்கு உட்படுத்தப்பட்டு கௌரவிக்கப்படுகின்றனர்: ஊக்கப்படுத்தப்படுகின்றனர். உயிர்த்துடிப்புள்ள பல்துறைசார்ந்த சமநிலை, ஆளுமையுள்ள சமூகம் எம்முன்னே கட்டியெழுப்பப்படுகின்றது. கல்வி கருமத்தொடரின் பண்புசார்விருத்தி முகிழ்தெழுகின்றது.

கடந்த மூன்று தசாப்தகால யுத்தம், பல்வேறு வகையான எதிர்த்தாக்கங்களுக்கும் ஒவ்வாத சூழலுக்கும் முகம் கொடுத்து பலம் குன்றியுள்ளன எமது சமூகத்தின் வளர்ச்சியை முன்னெடுக்க, சாதனைகள் தொடர்ந்து படைக்க கல்வி ஒரு களமாக அமைய வேண்டும். இதை முன்னெடுப்பதற்காக பரிசளிப்பு விழாக்கள் பாடசாலைகளில் தொடர வேண்டும். மண்முனை தென்மேற்கு கோட்டத்தைப் பொறுத்த வரையில் இவ்வித்தியாலயத்தின் சாதனைகள் காத்திரமானவை: முன்மாதிரியானவை, இவை எதிர் காலத்தில் தொடர வேண்டும். எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய திறமைமிக்க மாணவர் சமூகம் ஒன்றினை இந்நாட்டிற்கும் இச் சமூகத்திற்கும் இட்டு செல்வதற்கு அதிபர் ஆசிரியர், மாணவர்கள் பாடசாலை, அபிவிருத்திச் சபை என்பன விடா முயற்சியுடன் உழைக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளன. இதனை உணர்ந்து ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளை செவ்வனே நிறைவேற்ற வேண்டும். எனக் கேட்டுக் கொள்வதுடன் பரிசளிப்பு விழாவில் பாராட்டுப் பெறும் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் ஆகியோரை கோட்டத்தின் சார்பாக பாராட்டுவதோடு மலர் சிறப்புற வெளிவர எல்லாம்வல்ல தான்தோன்றீஸ்வரர் அருள் பெற வேண்டுகிறேன்.

திரு.ந.தயாசீலன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
மண்முனை.தெ.மேற்கு
மட்டக்களப்பு மேற்கு வலயம்

# பாடசாலைக் கீதம்

முனைக்காடதனில் முத்தமிழ் தந்திடு முதன்மை கலையகமே.

முதறிஞர் பலர் வாழ்ந்திடத்தந்த முதன்மை கலையகமே.

வித்தகர் பலரை வியம்புறவீந்து விளங்குநற் கலையகமே

விவேகானந்த வித்தியாலயம் எனும் புகட்கலையகமே

உத்தமர் பலரை உய்வுடன் ஈந்த உண்மைக்கலையகமே

உன்புகழ் எட்டுத் திசையிலும் வீசும் உயர்வோம் உயர்வோமே.

(முனைக்காடதனில்..........)

அன்னை பிதா குரு தம்மை மதிப்போம் ஆலயம் தொழுதிடுவோம்.

அகிலமும் போற்றிட நன்றாய் வாழ்வோம் ஆண்டவர் துணை பெறுவோம்.

கண்ணினை ஒத்திடு கணிதம், விஞ்ஞானம் கருத்துடனே படிப்போம்.

கலையுயர் அழகியல், ஆக்கம் சூழல் கற்று முன்னேறிடுவோம்.

பெறுவதை வாழ்வில் பெற்றிடுவோமிதில் பெருமைகள் தேடிடுவோம்.

(முனைக்காடதனில்............)

## தூரநோக்கு (VISION)

"நல்லொழுக்கமும் உயரிய மனிதப் பண்பும் உடைய தரமான கல்விச் சமூகம்" இதுவே கல்லூரியின் இலக்கு.

## பணிக்கூற்று (MISSION)

தேசிய இலக்குகளையும் அடிப்படை தேர்ச்சிகளையும் அடையத்தக்க வகையில், சமூகத்தில் இருந்தும் அரசிடமிருந்தும் கிடைக்கப்பெறும் பௌதிக, மனித வளங்களை உச்ச நிலையில் பயன்படுத்துவது, இதனூடாக நவீன கல்வி புலத்திலும், பன்முக ஆளுமை விருத்தியிலும் தேர்ச்சிமிக்க ஆற்றலாளர்களை உருவாக்குதல்.

இந்த வகையிலேயே கல்லூரியின் இலட்சியப் பணி அமைந்துள்ளது.

## மகுடவாசகம்

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்"



# அதிபரின் உள்ளத்தில் இருந்தும் ஆண்டறிக்கையும்

2008.10.22ஆந் திகதி இப் பாடசாலையில் வந்து கடமையேற்ற போது பாடசாலையில் வகுப்பறை பற்றாக்குறை, ஆசிரியர் பற்றாக்குறை, மாணவர் அடைவு மட்டக் குறைவு என்பன மிகவும் தாழ்வான நிலையில் காணப்பட்டன .

முனைக்காட்டு ஊர் மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் என்னை அதிபராக ஏற்றுக் கொண்டனர் அதற்கு கைமாறாக இப்பாடசாலையை சிறந்த ஒரு பாடசாலையாக மிக விரைவாக மாற்றவேண்டிய தேவை எனக்கு இருந்தது அந்த வகையில் 2009ம் ஆண்டு தொடக்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட தொடங்கினேன்.

இப்பாடசாலையை முன்னேற்றுவதற்கு கிராமத்து மக்கள் மிகவும் ஒத்தாசை புரிந்தனர். முனைக்காடு இராமகிருஸ்ணா விளையாட்டுக்கழகம், ஸ்ரீ சித்திவிநாயகர் கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபை, வர்த்தக சங்கம், ஸ்ரீகொட்டாம்புலை முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபை ஆகிய அமைப்புக்கள் நிதியுதவியினை செய்தனர்

"Term" நிறுவன அனுசரணையுடனும், பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்தின் அனுசரணையின் சிபார்சுடனும் 2009ம் ஆண்டு தகரக் கொட்டில் ஒன்று அமைக்கப்பட்டது. அடுத்ததாக, எனது வேண்டுகோளின் பேரில், திருமதி இலட்சுமிப்பிள்ளை மயில்வாகனம் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் இந்தக் கிராமத்தில் கொண்ட பற்றின் காரணமாக ரூபா250000 பெறுமதியான வளவு ஒன்றினை வாங்கி அன்பளிப்பாக இப்பாடசாலைக்கு கையளித்தனர். அதே ஆண்டில் அவ்வளவில் 100'X25' அளவிலான ரூபா 3500000 பெறுமதியான வகுப்பறைக் கட்டிடம் ஒன்று அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கட்டப்பட்டது.

வேள்ட் விசன் லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் ரூபா 200000 பெறுமதியான 40'x20' அளவான தகரத்திலான அரை நிரந்தர வகுப்பறை ஒன்றும் 2010ல் கட்டப்பட்டது. 2010ம் ஆண்டு மலசல கூடத் தொகுதி ஒன்றையும் குடிநீர் விநியோக வசதியையும் "ஆர்ச்நோவா" நிறுவனம் அமைத்துத் தந்துள்ளது.

இவ்வாண்டில்(2011) அமெரிக்க மக்களின் நிதியுதவியுடன் USAID நிறுவனம் 12 வகுப்பறைகள் கொண்ட இரண்டு மாடிக்கட்டிடம் ஒன்றையும், மலசலகூடத்தொகுதி, இரண்டையும், ஆசிரியர் விடுதி ஒன்றையும் தற்போது கட்டிக் கொண்டிருக்கின்றனர் ஆசிரியர் விடுதி அமைப்பதற்குப் போதுமான இடவசதி இல்லாதிருந்தது இவ்வேளையில் பாடசாலை நிருவாகவும் ஊர் மக்களுமாக ரூபா 250000 பெறுமதியான வளவு ஒன்றை வாங்கியுள்ளோம்.

## கல்வி நடவடிக்கை

2009ம் ஆண்டில் கணித பாட ஆசிரியர் உட்பட 09 ஆசிரியர்கள் பற்றாக்குறையுடன் கல்வி நடவடிக்கையை மேற்கொண்டோம் 2010ம் ஆண்டில் ஆசிரியர் பற்றாக்குறை ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டது.

அரசாங்கத்தினால் நடாத்தப்படுகின்ற பொதுப்பரீட்சைக்கான தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை,க.பொ.த(சா.த) பரீட்சை ஆகிய பரீட்சைகளில் எமது பாடசாலை குறிப்பிடத்தக்க அளவு பெறுபேறுகளைப் பெற்றுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| 2009 | - | 02 மாணவர்கள் சித்தி | 100 க்கு மேல் | 04 பேர் |
| 2010 | - | 02 மாணவர்கள் சித்தி | 100 க்கு மேல் | 13 பேர் |
| 2011 | - | 07 மாணவர்கள் சித்தி | 100 க்கு மேல் | 17 பேர் |

இம்முடிவுகள் பெறுபேற்றின் வளர்ச்சி போக்கையே காட்டுகின்றன. அதே போல் க.பொ.த(சா.த) பரீட்சைகளிலும் கூடிய அடைவையே பெற்றுள்ளோம்.

| | | | |
|---|---|---|---|
| 2009 | - | 05 மாணவர்கள் சித்தி | 23 |
| 2010 | - | 14 மாணவர்கள் சித்தி | 35 |

இதில் விசேடமாகக் குறிப்பிட வேண்டிய அம்சம் கணித பாடத்தில் 60 மாணவர்கள் சித்தி பெற்றள்ளனர் இதில் A தர சித்தியும் அடங்கும் பொதுவாக பாடசாலையின் அடைவுமட்டம் உயர்ந்து கொண்டு போவது வெளிப்படையாகும். இதற்கு வலயத்தின் கண்காணிப்பும், ஊக்குவிப்பும் ஆலோசனையும் காரணங்களாக அமைந்துள்ளன. 2011 இல் க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களும் சிறப்பான பெறுபேற்றை பெறுவார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## 2010, 2011ஆம் ஆண்டு தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் விபரம்.

### 2010ஆம் ஆண்டு 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் விபரம்.

| இல | மாணவர் பெயர் | பெற்ற புள்ளி |
|---|---|---|
| 1. | அன்னகேசரி - நிதுர்ஷா | 141 |
| 2. | சிவஞானசெல்வம் - ஜதீக்கா | 139 |
| 3. | சிவானந்தம் - டக்சாயினி | 138 |
| 4. | தங்கத்துரை – வரிசனா | 132 |
| 5. | சோமசுந்தரம் - மோகனமதுரா | 128 |
| 6. | செல்வராசா- நிறஞ்சினி | 126 |
| 7. | அரியநாயகம் கதீஸ்காந் | 126 |
| 8. | சுரேஸ் மிதுசாளினி | 117 |
| 9. | துரைராசா டிலக்சனா | 112 |
| 10. | ஜெயக்குமார் யதுஷா | 110 |
| 11. | ஜெயக்காந்தன் லக்சன் | 106 |
| 12. | இராரெத்தினம் கவிவர்மா | 103 |
| 13. | விஸ்வலிங்கம் டினேஸ்வரன் | 102 |

### 2011ஆம் ஆண்டு 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் விபரம்.

| இல | மாணவர் பெயர் | பெற்ற புள்ளி |
|---|---|---|
| 1. | சோமசுந்தரம் ஜீவகரன் | 150 |
| 2. | நற்குணம் நிருசாளினி | 145 |
| 3. | வயிரமுத்து மதுசாளினி | 144 |
| 4. | பரமானந்தம் கலியுகன் | 136 |
| 5. | விவேகானந்தன் விதுஜா | 124 |
| 6. | வீரசிங்கம் வினோதா | 122 |
| 7. | மோட்சசேகரம் பிரணவன் | 119 |
| 8. | விஜயராசா கோவிசாளினி | 117 |
| 9. | விக்கினேஸ்வரன் தச்சிகா | 117 |
| 10. | மதிரூபன் கலைமதி | 115 |
| 11. | சுதாகரன் விமலேஸ்வரி | 113 |
| 12. | வேதநாயகம் கவிப்பிரியா | 110 |
| 13. | துரைராசசிங்கம் தனுஸ்கரன் | 109 |
| 14. | மயில்வாகனம் குஹனியா | 109 |
| 15. | விநாயகமூர்த்தி குபேனியா | 104 |
| 16. | சண்முகலிங்கம் விஜிதா | 103 |
| 17. | காசுபதி தனுப்பிரியா | 103 |

மேலும் சர்வதேச சிறுவர் தினத்தை நினைவு கூறும் முகமாக, பிரதேச செயலகம் வருடா வருடம் நடாத்தும் கணித அறிவுப்போட்டி, விஞ்ஞான அறிவுப்போட்டி, தேசப்படம் குறித்தல் ஆங்கிலச் சொற்கள் மனனம் செய்தல் போன்ற போட்டிகளை நடாத்தி வெற்றி பெறும் மாணவர்களுக்கு பெறுமதியான புத்தகங்களை வழங்கி வருகின்றது. அத்துடன், எமது பாடசாலைக்கும் பெறுமதியான ஒரு தொகுதிப்புத்தகங்களை வழங்கியுள்ளனர். இந்த நடவடிக்கையும் நேரடியாக கல்வி வளர்ச்சிக்கு உதவி புரிகின்றது.

இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் எமது மாணவர்கள் கோட்டம் வலயம், மாவட்டம், மாகாணம் ஆகிய மட்டங்களிலும் பல சாதனைகளை படைத்துள்ளனர். அத்தோடு இப்பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் திரு.ம.அரியதாஸ் அவர்கள் தேசியமட்டத்தில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். மாணவர்களின் அறிவு வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு வருடா வருடம் சுற்றுலா பயணங்களும் மேற்கொள்ளப்படுகின்றன

**தேவைகள்**

845 மாணவர்களையும் 38 ஆசிரியர்களையும் கொண்ட இப்பாடசாலை மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் அதிகூடிய மாணவர்களைக் கொண்ட பாடசாலையாக உள்ளது. இப்பாடசாலை மாணவர்களின் கலைத்திறனை வளர்ப்பதற்கும் மாணவர்களின் காலை ஒன்று கூடல் நிகழ்வை நடாத்தும் ஒன்று கூடல் மண்டபம் ஒன்று அவசிய தேவையாக உள்ளது. இந்தத் தேவையினை பூர்த்தி செய்து தரும்படி கௌரவ முதலமைச்சர் அவர்களை மிகவும் வினையமாக ஊர்மக்கள் சார்பாகவும் கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு.பொ.நேசதுரை**
**(வித்தியாலயஅதிபர்)**

# உங்கள் சிந்தனைக்கு

1) இறைவனைத் தவிர வேறு எதிலும் மிகுந்த பற்று வைக்ககூடாது

2) மரணம் வருவது இவ்வளவு உறுதியாக இருக்கும்போது நல்லொதொரு காரியத்துக்காக உயிரை விடுவது மேல்

3) சுலபமாக எல்லாம் முடிந்து விட்டால் வாழ்க்கையிள் சுவை என்பதே இராது

4) கீழப்படியக் கற்றுக் கொண்டால் கட்டளையிடும் பதவி தானாக வரும்

5) நாவினால் தடுமாறுவதை விட நடைபாதையில் தடுமாறி விழுவது மேல்

# பாடசாலையின் வரலாறு

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு மாநகரிலிருந்து தெற்கே 15கிலோமீற்றர் தொலைவில் வயலும் வயல்சார்ந்த இடமுமாகிய மருத நிலப் பரப்பிலே அமைந்துள்ள முதுபெரும் கிராமம் முனைக்காடு ஆகும். இங்கு முத்தமிழ் தந்திடும் முதன்மைக் கல்வி நிலையமாக மிளிர்கிறது விவேகானந்தா வித்தியாலயம் மண்முனை தென்மேற்கு கல்விக்கோட்டத்தில் உள்ள 18 பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை அதிகமுள்ளதாகவும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய நிர்வாகத்திற்குட்பட்ட தரம்-1C பாடசாலையாகவும் இது விளங்குகிறது.

## தோற்றுவாய் :-

இப் பாடசாலையை அமைப்பதற்கு முனைக்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு வெள்ளையப்போடி என்பவரே காணிகொடுத்து உதவியவராவார்.இவரால் வழங்கப்பட்ட காணியில் அக்கிராமத்தைச் சேர்ந்த முருகப்பன் உடையார் என்பவர் களிமண் சுவர் ,தென்னோலைக்கூரை, மண்தரை ஆகியவற்றுடன் ஒரு கட்டிடத்தை கட்டி 1923ம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி பாடசாலையை ஆரம்பித்து நடத்தினர் அக்கால கட்டத்தில் பாடசாலையை தொடர்ந்து நடத்துவதற்கு மெதடிஸ்த மிஷனறிமாரே பல வழிகளிலும் உதவி வழங்கினர் ஆதலினால் இப்பாடசாலைக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை எனப் பெயர் சூட்டப்பட்டது.

## முதல் தலைமை ஆசிரியர் :-

மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் முதலாவது அதிபர் இப்பாடசாலையை கட்ட உதவியவரும் முனைக்காட்டைப் பிறப்பிடமாகவும் கொண்டவருமான வெ.குமாரசாமி ஆவார். மாணவர்கள் 12பேர் மட்டுமே அக்காலத்தில் இப் பாடசாலையில் கல்வி பயின்றனர். இவரை அடுத்தாற்போல் முனைக்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு.சி.ஞானமுத்து அதிபராகக் கடமையேற்றார். இவருடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு வேலுப்பிள்ளை முனைக்காட்டைச் சேர்ந்த திருமதி தங்கம்மா சோமசுந்தரம் ஆகியோர் ஆசிரியர்களாகக் கடமை புரிந்தனர். ஆரம்பத்தில் இது ஓர் ஆரம்பப் பாடசாலையாகவே இயங்கியது. காலப்போக்கில் அண்ணாமலை எனும் சட்டம்பி வாத்தியாரும் கற்பித்தலில் இணைந்து கொண்டார்.

## வகுப்புக்கள் அதிகரிப்பு :-

ஞானமுத்து அதிபரின் காலத்தில் இவ் வகுப்புக்கள் அதிகரிக்கப்பட்டு 8ஆம் வகுப்புடன் இப்பாடசாலை இயங்கியது. இவர் தொடந்து 20 வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெற்றார் இவருக்குப் பின்னர் மூன்றாவது அதிபராக முனைக்காட்டைச்சேர்ந்த தம்பிப்போடி அருளம்பலம் கடமை புரிந்திருக்கின்றார். இவருடைய காலத்தில் பாடசாலைக்கென ஒரு வயல் நிலம் காடு வெட்டி பெறப்பட்டது அதில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டதாக சமூகப் பெரியோர் கூறுகின்றனர்.

## வகுப்புக்கள் குறைக்கப்படல் :-

திரு.த.அருளம்பலம் அதிபர் இடமாற்றம் பெற்ற பின்னர் நான்காவது அதிபராக முதலைக்குடாவைச் சேர்ந்த திரு கோபாலபிள்ளை நியமிக்கப்பட்டார். எட்டாம் வகுப்பு வரை இருந்த இப் பாடசாலையில் அவருடைய காலத்தில் வகுப்புக்கள் ஐந்தாகக் குறைக்கப்பட்டன. அத்துடன் வயற் காணியும் சிறு வயது மாணவர்களால் பராமரிக்கமுடியாது என்ற ஒரே காரணத்தினால் அயல்கிராமப் பாடசாலைக்கு பராமரிப்பதற்காக வழங்கப்பட்டது.

இவரின் இடமாற்றத்தையடுத்து நாவற்குடாவைச் சேர்ந்த திரு கணபதிப்பிள்ளை சில வருடங்கள் அதிபராக கடமையாற்றிச் சென்றார். ஆரையம்பதியைச் சேர்ந்த திரு.பூபாலபிள்ளை என்பவரின் சேவைக்காலத்தின் பின்னர் வாகரையைப் பிறப்பிடமாக கொண்ட திரு கபிரியேல் சில வருடங்கள் அதிபராக கடமையாற்றினார். அவர் சென்றதும் பாடசாலைப் பொறுப்பினை திரு வா.சிவப்பிரகாசம் ஐயா பொறுப்பேற்றுச் சிறிது காலம் நடத்தினார் அவரைத்தொடர்ந்து முனைக்காட்டைச் சேர்ந்த திரு.க.கனநாயகம் 15.10.1976 இல் 9வது அதிபராகக் கடமையேற்றார்

வளர்ச்சிப் பாதையில் :-

02.02.1976 இல் ஆரையம்பதியை பிறப்பிடமாகக் கொண்ட திரு.த.நல்லிங்கம் அதிபராக நியமிக்கப்பட்ட போது ஆரம்பப் பாடசாலையாக இயங்கி வந்த இந்தப் பாடசாலை பின்னர் 500க்கு மேற்பட்ட மாணவர்களையும் 12 ஆசிரியர்களையும் கொண்ட பாடசாலையாக இயங்கத் தொடங்கியது. இவர் தனது 09 வருட சேவைக்காலத்தில் ஒரு வகுப்பறை கட்டடத்தையும் ஒரு மலசல கூடத்தையும் கட்டினார் பாடசாலையின் பெயர் மெ.மி.த.க. பாடசாலை என்பதற்கு பதிலாக விவேகானந்தா வித்தியாலயம் என பெயர் மாற்றியமைக்கப்பட்டது.

மூன்று வகுப்பறைக் கட்டடங்களுடன் வளர்ச்சியடைந்த விவேகானந்தா வித்தியாலயம் முன்புற சுற்றுமதிலையும் பெற்றது அதிபர் 31.12.1995 இல் இடம் மாற்றம் பெற்றுச் சென்றார். 1996. தை. 01 இல் முனைக்காட்டைச் சேர்ந்த திருமதி.த.விஜயரெத்தினம் அதிபராக பணியேற்றார் இவருடைய காலத்திலேதான் க.பொ.த.(சா.த) வகுப்பு வரை நடத்துவதற்கான வசதி பெற்ற பாடசாலையாக இப்பாடசாலை பெருவளர்ச்சி கண்டது.

துரித வளப்பகிர்வு :-

திருமதி.த.விஜயரெத்தினம் அதிபராக இருந்த காலத்திலேதான் 80'X25' வகுப்பறை கட்டிடம் கட்டப்பட்டதுடன் பாடசாலைக்கென ஒரு புதிய காணியும் சொந்தமாக வாங்கப்பட்டது அதில் கல்வித் திணைக்கள அனுசரணையில் "நெக்கொட்" நிறுவனத்தின் நிதியுதவியுடன் இரு மாடிக்கட்டடம், மலசலகூடம், சுற்றுவேலி ஆகியன அமைக்கப்பட்டன. அதிபர் திருமதி த.விஜயரெத்தினம் 18.03.2008 இல் இடமாற்றம் பெற்றுச் செல்ல பிரதி அதிபராக இருந்த திரு.மா.சத்தியநாயகத்திடம் நிர்வாகப் பொறுப்பு 08.06.2008 வரை ஒப்படைக்கப்பட்டது. அதனையடுத்து நிறைவேற்று அதிபராக 09.06.2008 முதல் 01.10.2008 வரை திருமதி யோ.ஞானப்பிரகாசகம் கடமையாற்றினார். அவரைத் தொடர்ந்து 02.10.2008 முதல் இன்று வரை மகிழடித்தீவைப் பிறப்பிடமாக கொண்ட திரு.பொ.நேசதுரை அவர்கள் அதிபராக பணியாற்றி வருகிறார்.

**பௌதீக வளம்**

திரு.பொ.நேசதுரை அதிபருடைய காலத்தில் "Term" நிறுவனத்தின் அனுசரணையுடன் 2009ம் ஆண்டு 100'X 20' அளவுடைய தகரத்திலான வகுப்பறைக்கட்டிடம் கட்டப்பட்டது. அதேபோன்று மனோன்மணியின் வளவு ரூபா 350000 கொடுத்து 2010ம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அவ்வளவுக்குள் 100'X25' அளவுடைய வகுப்பறைக்கட்டிடம் ஒன்றும் கட்டப்பட்டது. இவ்வளவை வாங்குவதற்கு திருமதி மயில்வாகனம் இலட்சுமிப்பிள்ளை அவர்களின் பிள்ளைகள் ரூபா 250000 பணத்தை பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தனர் அவ்வளவுக்குள் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு திருமதி இலட்சுமிப்பிள்ளை மண்டபம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

2010ம் ஆண்டில் 40'X20' அளவான தகரத்திலான தற்காலிக வகுப்பறைக்கட்டிடம் ஒன்றும் வேள்ட்விஷன் லங்கா நிறுவனத்தின் உதவியோடு அமைக்கப்பட்டது.

2011ம் ஆண்டில் பாடசாலையின் மேற்குப்புறமாக திரு.பூ.சுரேந்திரராசா அவர்களிடம் ரூபா 250000 பெறுமதியான வளவு ஒன்றும் வாங்கப்பட்டது. இவ்வளவுக்குள் ஆசிரியர் விடுதி கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றது. மேலும் 12 வகுப்பறைகளை கொண்ட இருமாடிக் கட்டிடமும், இரண்டு மலசல கூடத்தொகுதியும் USAID நிறுவனத்தின் அனுசரணையுடன் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இப்பாடசாலையின் ஆரம்பகாலக் கட்டிடமாக இருந்து பின்னர் நூலகமாக மாற்றப்பட்டிருந்த 20'X30' அளவுடைய கட்டிடம் புதிய கட்டிடம் கட்டுவதற்காக 2011 ஆவணி மாதத்தில் இடிக்கப்பட்டது.

**கல்வி வளர்ச்சி**

1976ம் ஆண்டில் இருந்து இன்று வரை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைந்து வந்துள்ளனர் 2011ல் 7மாணவர்கள் சித்தியடைந்து மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் ஏனைய பாடசாலைகளை விட இப்பாடசாலை முன்னிலைக்கு வந்துள்ளது.

அத்துடன் 2010 டிசம்பரில் 14 மாணவர்கள் க.பொ.த(சா.த) பரீட்சையில் சிறப்பாக சித்தியடைந்ததுடன் 2011ம் ஆண்டில் க.பொ.த(உ.த) வகுப்பும் மாகாணக்கல்வி திணைக்களத்தினதும், கிழக்கு மாகாண சபை கௌரவ முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்களின் சிபார்சுடன் ஆரம்பிக்கப்பட்டது. 2011ம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் இருந்து 1C பாடசாலையாக இப்பாடசாலை தரமுயர்த்தப்பட்டுள்ளது. என்பது ஈண்டு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

பொதுவாக மாணவர்களின் கல்வி வளர்ச்சி உயர்வடைந்துள்ளது. மேலும் EKSP திட்டத்தின் கீழ் 2010ம் ஆண்டில் கணனி அறை ஒன்றும் உருவாக்கப்பட்டது. 13 கணனிகள் இவ்வறையில் உள்ளடக்கப்படிருக்கின்றது.

மாணவர்களின் கல்வி வளர்ச்சி கருதி திருமதி இலட்சுமிப்பிள்ளையின் பிள்ளைகள் 2010ம் ஆண்டில் இருந்து இன்றுவரை 16 மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா1000 வீதம் நிதியுதவி வழங்கிக் கொண்டிருக்கின்றனர். இவ்வுதவி பல்கலைக்கழகம் வரை வழங்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதன் தொடர்ச்சி 20ம் பக்கத்தில் உள்ளது.

# பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள்

## (1923.01.01 -30.11.2011 வரை)

- திரு.வெ.குமாரசாமி — முனைக்காடு
- திரு.சி.ஞானமுத்து — முனைக்காடு
- திரு.த.அருளம்பலம் — முனைக்காடு
- திரு.அ.கோபாலபிள்ளை — முதலைக்குடா
- திரு.கணபதிப்பிள்ளை
- திரு.பூபாலபிள்ளை — ஆரையம்பதி
- திரு.எஸ்.எஸ் கபிரியல் — நாவற்குடா
- திரு.வா.சிவப்பிரகாசம் — முனைக்காடு
- திரு.க.கனகநாயகம் — முனைக்காடு
- திரு.த.நல்லலிங்கம் — ஆரையம்பதி
- திருமதி.த.விஜயரெத்தினம் — முனைக்காடு
- திரு.மா.சத்தியநாயகம் — முனைக்காடு
- திருமதி.யோ.ஞானப்பிரகாசம் — கொக்கட்டிச்சோலை
- திரு.பொ.நேசதுரை 02.10.2008 - இன்றுவரை மகிழடித்தீவு



## பிரதி அதிபரின் உள்ளத்திலிருந்து......

2008.10.02 அன்று மட் /முனைக்காடு விவேகானந்த வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையேற்ற திரு.பொ.நேசதுரை அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த எமது வித்தியாலயத்தை தனது தூரநோக்கு சிந்தனையாலும் ஆளுமை விருத்தியாலும் மிகவும் மோசமான நிலையில் காணப்பட்ட பாடசாலை தேவைகளை இனங்கண்டு கிடைக்கப்பெற்ற குறைந்த பட்ச பௌதீக வளங்களையும் ஆசிரிய வளங்களையும் சமூகத்தின் கூடிய அளவு மனித வளங்களையும் ஒருங்கிணைத்து பாடசாலையின் வளர்ச்சிக்காக வித்திட்டவர் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

இவர் பாடசாலையின் வளர்ச்சிப்போக்கில் சமூகத்தை முழுமையாக ஈடுபடுத்தியவராவார் குறிப்பாக, மட்டக்களப்பு மேற்கு வலய பாடசாலைகளில் மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயத்திலேயே இரவு நேர கற்றலுக்கு முதலில் சமூகம் அங்கிகாரம் வழங்கியது என்பது மிகையாகாது. பௌதிக வளங்களை பெற்றக்கொள்வதிலும் சரி அடைவு மட்டத்தை அதிகரிப்பதிலும் சரி கிராமமட்ட அமைப்புகள் அளப்பரிய பங்களிப்பினை வழங்கிக்கொண்டிருக்கின்றன என்றால் அது எமது வித்தியாலய அதிபரின் வழிகாட்டலிலேயே ஆகும்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் அதிகளவான மாணவர்தொகையைக் கொண்டுள்ள எமது வித்தியாலயம் கூடுதலான அடைவு மட்டத்தை வெளிப்படுத்தும் ஒரு ஸ்தாபனமாகவும் வளர்ந்துக் கொண்டு வருவதை நடந்து முடிந்த புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

எனவே. ஒட்டுமொத்தமாகக் குறிப்பிடுவதானால் வித்தியாலய அதிபரின் சிறந்த திட்டமிடலும் முகாமைத்துவமும் தூரநோக்கு சிந்தனையும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும், பாடசாலையின் வளர்ச்சிப்போக்கை ஒரு சிறந்த பொற்காலத்திற்கு அழைத்துச் செல்கின்றது எனவே ஆற்றல் மிகு வித்தியாலய அதிபரது சேவை தொடர்ந்தும் எமது வித்தியாலயத்திற்கு தேவை என்பதோடு அவருக்கு கிராம மக்கள் என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்பது உறுதி அதேபோல மட்டக்களப்பு மேற்கு வலயமும் எமது பாடசாலை வளர்ச்சிக்காக பலவழிகளிலும் உதவிக்கொண்டிருக்கின்றார்கள் மேலும் உதவுவதற்கு காத்துக்கொண்டிருக்கின்றார்கள் இவ்வாறான சிறந்ததொரு கைங்கரியம் கிடைக்கின்ற வேளையில் பாடசாலை நிருவாகத்தை சிறப்பாக கொண்டு செல்ல இலகுவாக இருக்கும் என்பதுடன் எமது வித்தியாலய அதிபரின் நிருவாகத்திறனும் தொலைநோக்கு சிந்தனையும் தொடர்ந்தும் கிடைக்க வேண்டும் என்பதோடு, எமது பாடசாலையில் கடமையாற்றும் அனைத்து ஆசிரியர்களது அர்ப்பணிப்புப் மிகுந்த சேவையை கிராம மக்கள் சார்பாக மனமுவந்து பாராட்டுகின்றேன்.

**திரு.மா.சத்தியநாயகம்**
**(பிரதி அதிபர்)**

மட்/ம.மே/முனைக்காடு விவேகானந்தா.வித்தியாலயம்
நடாத்தும்
பரிசளிப்பு விழா -2011

## பரிசு பெறுவோர் விபரம்

## 2010, 2011ஆம் ஆண்டு தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாராட்டுப் பெறுவோர் விபரம்.

### 2010- புலமைப்பரிசில் சாதனையாளர்கள்

| இல | மாணவர் பெயர் | பெற்ற புள்ளி |
|---|---|---|
| 1. | கேமாகரன்- டனிஸ்கா | 155 |
| 2. | ரவி- பிரவிகா | 147 |

### 2011 - புலமைப்பரிசில் சாதனையாளர்கள்

| இல | மாணவர் பெயர் | பெற்ற புள்ளி |
|---|---|---|
| 1. | விஸ்வலிங்கம்-மிகுணன் | 168 |
| 2. | கேசவப்போடி-சுலக்சன் | 164 |
| 3. | தியாகராசா-யிவிதன் | 160 |
| 4. | லோகராசா- குருசிகா | 159 |
| 5. | மோட்சசேகரம்-பிரவிநாத் | 156 |
| 6. | ஆரோக்கியம்-புர்தீஸ் | 153 |
| 7. | இரகுநாதன்-கிரிசாந் | 151 |

## கல்விக்கான உதவிகள்

எமது பாடசாலைக்கு கல்விக்கான உதவிகள் கூடுதலான அளவு கிடைக்கின்றது "வேள்ட் விஷன் லங்கா" பட்டிப்பளை பிராந்திய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் கணித பாட ஆசிரியர் ஒருவரைத் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் நியமித்து மாதாந்தம் சம்பளம் வழங்குகின்றது 2010ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இந்நிறுவனம் பெருந்தொகைப் பணத்தை செலவிட்டு வருகின்றது இதனை 23 வீதமாக இருந்த கணித பாடசித்திவீதம் 2010ம் ஆண்டில் 60 வீதமாக உயர்வடைந்துள்ளது இவ்வுதவி பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வருகின்றது அத்துடன் தரம் 9 கல்வி கற்று இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைத்து அவர்களுக்கு விஷேடமாக கற்பிப்பதற்கும் உதவிக்கொண்டிருக்கின்றது. அந்த வகையில் அந்நிறுவனத்தாருக்கு எமது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதே போன்று மட்டக்களப்பு கிறிஸ்தவ வாழ்வு சமூகம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு மேலதிக பயிற்சி வழங்குவதற்காக மாதாந்தம் ரூபா 2000 வீதம் இரண்டு வருடங்களுக்கு மேலாக உதவிக் கொண்டிருக்கின்றது 2011 இல் தரம் 5 புலமைப்பரீட்சையின் சித்தி வீதம் அதிகரிப்பதற்கு இவ் உதவியும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. மேலும், மட்டக்களப்பு மேற்கு வலயம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.க.பாஸ்கரன் அவர்கள், ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு.இ.பாஸ்கரன் அவர்கள், ஆரம்பக்கல்வி.ஆ.ஆலோசகர் திரு. மாணிக்கப்போடி அவர்கள் ஆகியோர் கூடுதலான முயற்சி செய்துள்ளனர். அத்துடன் தரம் 5 வகுப்பில் கற்பித்த திரு.பே.குமாரலிங்கம் ஆசிரியரின் அர்ப்பணிப்பு ஆகியன இவ்வருட புலமைப் பரீட்சையில் கூடுதலான மாணவர்கள் சித்தி அடையக்காரணமாக அமைந்துள்ளன. இவர்கள் அனைவரையும் கிராம மக்கள் சார்பாக பாராட்டுகின்றோம்.

முனைக்காட்டு கிராமத்தில் இருக்கின்ற "ஒளிக்கல்லூரியும்", "துளிஅருவி" அமைப்பும் நேரடியாக இப்பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஈடுபடுகின்றனர் ஒளிக்கல்லூரி க.பொ.த(சா.த) மாணவர்களுக்கு பின்னேர வகுப்புக்களை நடாத்துகின்றது. அது போன்று "துளிஅருவி" அமைப்பு இரவு நேரத்தில் மாலை 06.00 - 09.00 மணி வரை தரம்-9 தொடக்கம் - 11வரையுள்ள மாணவர்களுக்கு பாடசாலை மண்டபத்தில் ஒன்று கூட்டி சுயகற்றலுக்கு உதவி செய்வதுடன் மாதாந்த மதீப்பீட்டுப் பரீட்சைகளையும் நடாத்துகின்றனர். இந் நடவடிக்கைகளும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகின்றது.

திரு.மயில்வாகனம்-யோகேஸ்வரன் குடும்பத்தினர் இப்பாடசாலையில் உள்ள 16 மாணவர்களுக்கு மாதாந்தம் தலா ஆயிரம் ரூபாவை வழங்கி வருகின்றனர். இனங்காணப்பட்ட திறமையான மாணவர்களுக்கு இவ்வுதவி வழங்கப்படுகின்றது. இது இம்மாணவர்கள் பல்கலைக்கழக படிப்பை முடிக்கும் வரை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதே போன்று திரு.ம.அரியதாஸ் ஆசிரியர் தனது நண்பனின் உதவியைப் பெற்று கணிதம்,விஞ்ஞானம் ஆகிய பாடங்களை மேலதிகமாக லீவு நாட்களிலும்,பிற்பகல் வேளையிலும் கற்பிப்பதற்கு ஆசிரியர்களை நியமித்து உதவி செய்து கொண்டிருக்கின்றார். மேலும், எமது பாடசாலையில் உள்ள ஆசிரியர்கள் அனைவரும் கூட்டாக அர்ப்பணிப்புடன் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றனர். எனவே இவர்கள் அனைவருக்கும் பாடசாலை அதிபர் என்ற வகையில் கிராமக்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதுவரை காலமும் இப்பாடசாலை க.பொ.த(சா.த) வரை வகுப்புக்களைக் கொண்டிருந்தது. 2011 செம்டெம்பர் மாதம் தொடக்கம் 1C பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த உயர்தர வகுப்பு வைப்பதற்கு முழு முயற்சி செய்து அனுமதி தந்தவர் மதிப்புக்குரிய கிழக்கு மாகாண முதலாவது முதலமைச்சர் என்ற பெருமைக்குரிய கௌரவ முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களேயாவார். இந்நடவடிக்கை இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு மகுடம் வைத்தாற்போல் அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது. அதற்காக இக்கிராமத்து மக்கள் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். இதே போன்று மாகாணசபை உறுப்பினர் திரு.பூ.பிரசாந்தன் அவர்களின் பங்களிப்பையும் கௌரவப்படுத்துகின்றோம்.

கடந்த மாதம் எமது பாடசாலைக்கு கிழக்கு மாகாண கௌரவ முதலமைச்சர் 3 கணனிகளை வழங்கியுள்ளார் இதன் மூலம் மாணவர்கள் ICT பாடத்துறையில் அறிவைப் பெறுவதற்கு இது வழிவகுத்துள்ளது.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.பா.அரியநேந்திரன் அவர்களும் 2008ம் ஆண்டு தனது வரவு செலவுத்திட்ட நிதியில் இப்பாடசாலைக்கு போட்டோ பிரதி செய்யும் இயந்திரத்தை கொள்வனவு செய்ய நிதி ஒதுக்கி கொடுத்திருக்கின்றார் அத்துடன், 2009ம் ஆண்டு 100' மதில் அமைப்பதற்கும் நிதி ஒதுக்கியுள்ளார்.

## க.பொ.த(சா.த) பரீட்சை -2009 - 2010

### சிறந்த பெறுபேறுகளைப் பெற்று க.பொ.த.உயர்தரம் கற்க தகுதி பெற்ற சாதனையாளர்கள்.

2009 க.பொ.த.(சா.த) சித்தி பெற்றவர்கள்

| இல | மாணவர் பெயர் | பெறுபேறு | | | |
|---|---|---|---|---|---|
| | | A | B | C | S |
| 1. | த.அருண்யா | 3 | 2 | 2 | 1 |
| 2. | ச.கிருஷ்ணவேணன் | 1 | 2 | 2 | 3 |
| 3. | அ.கிருபாதேவி | 1 | 2 | 2 | 2 |
| 4. | க.குவேந்தினி | 1 | 1 | 2 | 3 |

2010 க.பொ.த.(சா.த) சித்தி பெற்றவர்கள்

| இல | மாணவர் பெயர் | பெறுபேறு | | | |
|---|---|---|---|---|---|
| | | A | B | C | S |
| 1. | சி.கேமாகரன் | 2 | 1 | 4 | 1 |
| 2. | ச. சிவகுமார் | 1 | 2 | 3 | 1 |
| 3. | கா. திசாந் | 2 | 0 | 4 | 2 |
| 4. | ஆ. சிவராசா | 0 | 2 | 4 | 0 |
| 5. | பெ.குபேந்திரன் | 0 | 2 | 3 | 2 |
| 6. | சு. சுகன் | 3 | 0 | 3 | 1 |
| 7. | வ. மிதுஜா | 2 | 2 | 0 | 3 |
| 8. | மோ.யசோதரணி | 0 | 2 | 2 | 4 |
| 9. | சு. விஜிதா | 1 | 0 | 4 | 3 |
| 10. | கு. சதாயினி | 2 | 1 | 2 | 3 |
| 11. | ச. பிரதாசினி | 1 | 1 | 3 | 2 |
| 12. | தா. நளினி | 0 | 0 | 4 | 2 |
| 13. | கு. மிதுசனா | 0 | 1 | 3 | 2 |
| 14. | த.சோபநிதா | 1 | 0 | 4 | 1 |

**க.பொ.த(சா.த) சித்தி வீதம்**

| ஆண்டு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|
| 2005 | 16 | 04 | 25% |
| 2006 | 27 | 02 | 7.4% |
| 2007 | 27 | 04 | 14.8% |
| 2008 | 23 | 00 | 0% |
| 2009 | 15 | 04 | 26.6% |
| 2010 | 40 | 14 | 35% |

# இணைப்பாடவிதானம்

## தமிழ் மொழித்தினம்-2009

| இல | மாணவர் பெயர் | போட்டி | நிலை |
|---|---|---|---|
| | | | வலயம் |
| 01. | த.பவதாரணி | பேச்சு | 03 |

## தமிழ் மொழித்தினம்-2010

| இல | மாணவர் பெயர் | போட்டி | நிலை |
|---|---|---|---|
| | | | வலயம் |
| 01. | பா.பிரஷாமினி | பேச்சு | 03 |

## இணைப்பாடவிதானம்-கணிதம்-2010

| இல | மாணவர் பெயர் | நிலை |
|---|---|---|
| | | வலயம் |
| 01. | வி.கதிஸ் | 01 |

## இணைப்பாடவிதானம்-விளையாட்டு

### தனி நிகழ்ச்சியில் சாதனை படைத்த மாணவர்கள்-2009

| இல | மாணவர் பெயர் | நிகழ்வு | நிலை |
|---|---|---|---|
| | | | மாகாணம் |
| 01. | வி.சுவேந்திரன் | 1500m | 03 |

### முன்னோடி மாணவி

து.டிலக்சனா (தரம்-6)

## குழு நிகழ்ச்சியில் சாதனை படைத்த மாணவர்கள்-2010

| இல | மாணவர் பெயர் | நிகழ்வு | நிலை |
|---|---|---|---|
| | | | வலயமட்டம் |
| 01. | கு.சதாயினி | உதைப்பந்தாட்டம் | 02 |
| 02. | மோ.சசோதரணி | | |
| 03. | தி.தினேஸ்கா | | |
| 04. | த.நிருண்யா | | |
| 05. | க.யுவராஜினி | | |
| 06. | க.குவேனிகா | | |
| 07. | ச.டிபேதினி | | |
| 08. | சி.ராதிகா | | |
| 09. | க.அர்ச்சனா | | |
| 10. | க.அர்ச்சோபனா | | |
| 11. | பு.கஹானி | | |
| 12. | ப.டயாணி | | |
| 13. | மு.தீபிகா | | |
| 14. | பே.சத்தீஸ்சினி | | |
| 15. | இ.சுதர்சினி | | |
| 16. | கி.திதுஜினி | | |
| 17. | ர.ரஜியேந்தினி | | |
| 18. | ர.ஜனுதா | | |
| 19. | க.அர்ச்சனா | வலைப்பந்தாட்டம் | 01 |
| 20. | க.அர்ச்சோபனா | | |
| 21. | ப.டயாணி | | |
| 22. | மு.தீபிகா | | |
| 23. | க.குபேனிகா | | |
| 24. | சி.ராதிகா | | |
| 25. | பு.ஹஜானி | | |
| 26. | ச.டிபேதினி | | |
| 27. | மு.தீபிகா | பூப்பந்து | 02 |
| 28. | த.நிருண்யா | | |
| 29. | க.குபேனிகா | | |
| 30. | சி.ராதிகா | | |
| 31. | பு.ஹஜானி | | |
| 32. | ப.டயானி | | |

## தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி சாதனை படைத்த ஆசிரியர்கள்

### தேசியமட்டம்-2009 (கல்வி அமைச்சு)

| இல | ஆசிரியர் பெயர் | நிகழ்வு | நிலை |
|---|---|---|---|
| 01. | ம.அரியதாஸ் | **1500m** | 01 |
| 02. | ம.அரியதாஸ் | **800m** | 01 |
| 03. | ம.அரியதாஸ் | **400m** | 01 |

### தேசியமட்டம்-2010 (கல்வி அமைச்சு)

| இல | ஆசிரியர் பெயர் | நிகழ்வு | நிலை |
|---|---|---|---|
| 01. | ம.அரியதாஸ் | **800m** | 03 |

### பாட ரீதியாக சாதனை படைத்த மாணவர்கள்-2010

| இல | தரம் | மாணவர் பெயர் | பாடம் |
|---|---|---|---|
| 1. | 6A | த.கயானா | தமிழ் |
| 2. | | எ.யாழினி | ஆங்கிலம் |
| 3. | | எ.யாழினி | கணிதம் |
| 4. | | ச.தனுஸ்காந் | விஞ்ஞானம் |
| 5. | | ச.தனுஸ்காந் | சமயம் |
| 6. | 6B | க.குபேந்தினி | தமிழ் |
| 7. | | ம.கோவர்த்தனா | ஆங்கிலம் |
| 8. | | க.குபேந்தினி | கணிதம் |
| 9. | | சே.நோகேஸ்வரன் | விஞ்ஞானம் |
| 10. | | க.குபேந்தினி | சமயம் |
| 11. | 6C | ச.பிரசனியா | தமிழ் |
| 12. | | ச.பிரசனியா | ஆங்கிலம் |
| 13. | | பா.ஹேமப்பிரியன் | கணிதம் |
| 14. | | பா.ஹேமப்பிரியன் | விஞ்ஞானம் |
| 15. | | ச.பிரசனியா | சமயம் |
| 16. | 7A | க.துஷ்யந்தி | தமிழ் |
| 17. | | க.துஷ்யந்தி | ஆங்கிலம் |
| 18. | | க.துஷ்யந்தி | கணிதம் |
| 19. | | க.துஷ்யந்தி | விஞ்ஞானம் |
| 20. | | கோ.திலக்சனா | சமயம் |
| 21. | | க.துஷ்யந்தி | வரலாறு |
| 22. | 7B | வி.கதீஸ் | தமிழ் |
| 23. | | வி.ஜனனி | ஆங்கிலம் |
| 24. | | வி.கதீஸ் | கணிதம் |
| 25. | | வி.கதீஸ் | விஞ்ஞானம் |
| 26. | | வி.கதீஸ் | சமயம் |
| 27. | | வி.கதீஸ் | வரலாறு |

| இல | தரம் | மாணவர் பெயர் | பாடம் |
|---|---|---|---|
| 28. | 8A | அ.வேதினி | தமிழ் |
| 29. | | அ.வேதினி | ஆங்கிலம் |
| 30. | | சு.மாலினி | கணிதம் |
| 31. | | அ.வேதினி | விஞ்ஞானம் |
| 32. | | கா.ஜெயந்திமாலா | சமயம் |
| 33. | | சு.மாலினி | வரலாறு |
| 34. | 8B | ஞா.அகிலவேணி | தமிழ் |
| 35. | | கு.லூஜிதா | ஆங்கிலம் |
| 36. | | ஞா.அகிலவேணி | கணிதம் |
| 37. | | ஞா.அகிலவேணி | விஞ்ஞானம் |
| 38. | | ஞா.அகிலவேணி | சமயம் |
| 39. | | ஞா.அகிலவேணி | வரலாறு |
| 40. | 8C | நா.குபேதர்சினி | தமிழ் |
| 41. | | க.ஜசாந்தினி | ஆங்கிலம் |
| 42. | | நா.குபேதர்சினி | கணிதம் |
| 43. | | நா.குபேதர்சினி | விஞ்ஞானம் |
| 44. | | நா.குபேதர்சினி | சமயம் |
| 45. | | நா.குபேதர்சினி | வரலாறு |
| 46. | 9A | க.அச்சோபனா | தமிழ் |
| 47. | | க.அச்சோபனா | ஆங்கிலம் |
| 48. | | க.அச்சோபனா | கணிதம் |
| 49. | | க.அச்சோபனா | விஞ்ஞானம் |
| 50. | | க.அச்சோபனா | சமயம் |
| 51. | | க.அச்சோபனா | வரலாறு |
| 52. | 9B | க.அர்ச்சனா | தமிழ் |
| 53. | | க.அர்ச்சனா | ஆங்கிலம் |
| 54. | | பு.கஜானி | கணிதம் |
| 55. | | க.அர்ச்சனா | விஞ்ஞானம் |
| 56. | | க.அர்ச்சனா | சமயம் |
| 57. | | க.அர்ச்சனா | வரலாறு |
| 58. | 10A | க.யுவராஜினி | தமிழ் |
| 59. | | க.யுவராஜினி | ஆங்கிலம் |
| 60. | | க.யுவராஜினி | கணிதம் |
| 61. | | க.யுவராஜினி | விஞ்ஞானம் |
| 62. | | க.யுவராஜினி | சமயம் |
| 63. | | ச.பத்மகலா | வரலாறு |
| 64. | 10B | அ.பரமேஸ்வரன் | தமிழ் |
| 65. | | அ.பரமேஸ்வரன் | ஆங்கிலம் |
| 66. | | அ.பரமேஸ்வரன் | கணிதம் |
| 67. | | அ.பரமேஸ்வரன் | விஞ்ஞானம் |
| 68. | | அ.பரமேஸ்வரன் | சமயம் |
| 69. | | அ.பரமேஸ்வரன் | வரலாறு |
| 70. | 11A | வ.மிதுஜா | தமிழ் |
| 71. | | சி.கேமாகரன் | ஆங்கிலம் |
| 72. | | வ.மிதுஜா | கணிதம் |
| 73. | | வ.மிதுஜா | விஞ்ஞானம் |
| 74. | | ச.பிரதாசினி | சமயம் |
| 75. | | சி.கேமாகரன் | வரலாறு |
| 76. | 11B | ச.கிருஸ்ணவேணி | தமிழ் |
| 77. | | சி.பரணியா | ஆங்கிலம் |
| 78. | | சு.தினேஸ்குமார் | கணிதம் |
| 79. | | சு.தினேஸ்குமார் | விஞ்ஞானம் |
| 80. | | கு.தினேஸ் | சமயம் |
| 81. | | வி.கயர்சன் | வரலாறு |

# வகுப்பு ரீதியான முதன்மை மாணவர்கள் -2010

| இல | மாணவர் பெயர் | தரம் |
|---|---|---|
| 1. | யோ.டிவிசாளினி | 1A |
| 2. | சி.யதுஸ்கரன் | 1B |
| 3. | சி.லுக்சன் | 2A |
| 4. | வி.லிதர்சன் | 2B |
| 5. | ப.நிதர்சன் | 2C |
| 6. | சி.விதர்சன் | 3A |
| 7. | கா.துவாரிக்கா | 3B |
| 8. | கு.டர்ஷிகா | 3C |
| 9. | ஆ.புர்தீஸ் | 4A |
| 10. | தி.யிவிதன் | 4B |
| 11. | ம.ஸ்ரீப்பிரியா | 4C |
| 12. | ர.பிரவிக்கா | 5A |
| 13. | ச.நிதாசினி | 5B |
| 14. | தி.தினேஸ்கா | 5C |
| 15. | த.கயானா | 6A |
| 16. | க.குபேந்தினி | 6B |
| 17. | ச.பிரசனியா | 6C |
| 18. | க.துஷ்யந்தி | 7A |
| 19. | வி.கதீஸ் | 7B |
| 20. | அ.வேதினி | 8A |
| 21. | ஞா.அகிலவேணி | 8B |
| 22. | நா.குபேதர்சினி | 8C |
| 23. | க.அச்சோபனா | 9A |
| 24. | க.அர்ச்சனா | 9B |
| 25. | க.யுவராஜினி | 10A |
| 26. | அ.பரமேஸ்வரன் | 10B |
| 27. | வ.மிதுஜா | 11A |
| 28. | வி.கயர்சன் | 11B |

## அதிக நாட்கள் பாடசாலைக்கு சமுகமளித்த மாணவர்கள்-2010

| இல | மாணவர் பெயர் | தரம் | வரவு நாட்கள் |
|---|---|---|---|
| 1. | க.ரனுஸ்காந் | 1A | 192 |
| 2. | க.ஷாகரி | 1B | 187 |
| 3. | த.கவிப்பிரியா | 2A | 192 |
| 4. | சு.திலக்சினி | 2B | 188 |
| 5. | ம.சிறிப்பிரியன் | 2C | 188 |
| 6. | சி.கிரிதரன் | 3A | 192 |
| 7. | அ.அஜந்தினி | 3B | 190 |
| 8. | கு.டர்ஷிகா, சி.தர்சினி | 3C | 189 |
| 9. | கு.ஜேதீஸ் | 4A | 195 |
| 10. | க.குபேனி | 4B | 193 |
| 11. | கு.லோக்ஷன் , க.பவதாரணி | 4C | 193 |
| 12. | ந.ரனுஷ்கா , ச.நிதாசினி | 5A | 195 |
| 13. | சி.துஷாந்தினி | 5B | 194 |
| 14. | சி.சீராளன் | 5C | 186 |
| 15. | க.கஜரூபன் | 6A | 194 |
| 16. | ச.கிரிஜா | 6B | 193 |
| 17. | ம.ஸ்ரீவித்தியா | 6C | 194 |
| 18. | பா.சாருஜன் | 7A | 188 |
| 19. | த.லேமாலா, வி.ஜனனி | 7B | 194 |
| 20. | சு.மாலினி | 8A | 193 |
| 21. | ந.கோகிலவாணன் | 8B | 191 |
| 22. | ம.பவிசன் | 8C | 193 |
| 23. | க.குபேந்தினி, சி.கயேந்திரராஜ் | 9A | 194 |
| 24. | பு.கஜானி, வி.சர்மிலா, அ.கிருபா | 9B | 189 |
| 25. | ச.கிருஷாந்தன், ச.சஞ்சீவிகா | 10A | 192 |
| 26. | நா.ஜெகதீஸ் | 10B | 187 |
| 27. | கு.சதாயினி | 11A | 195 |
| 28. | நா.முகில்வண்ணன் | 11B | 193 |

➢ **பாடசாலையின் முதன்மை மாணவர்கள் -2010**

ச.சிவகுமார்
ச.பிரதாசினி

➢ **பாடசாலைக்கு அதிக நாட்கள் முதலில் சமுகமளித்த ஆசிரியர்கள் -2010**

திரு.ஏ.லோகசிங்கம்
திருமதி.ப.ஜெகதீசன்

➢ **க.பொ.த (சா.த) பரீட்சை பாட அடைவு மட்டத்தை 60வீதத்திற்கு மேல் பெற்ற ஆசிரியர்கள்-2009**

| ஆசிரியர் பெயர் | பாடம் |
|---|---|
| திருமதி யோ.தங்கத்துரை | சமயம் |
| திருமதி யோ.சந்திரராசு | தமிழ் |
| திரு.ம.அரியதாஸ் | சுகா/உடற்கல்வி |
| திரு.பொ.நேசதுரை | குடியுரிமை |
| திரு.தி.பத்மசுதன் | சித்திரம் |

➢ **க.பொ.த (சா.த) பரீட்சை பாட அடைவு மட்டத்தை 60வீதத்திற்கு மேல் பெற்ற ஆசிரியர்கள்-2010**

| ஆசிரியர் பெயர் | பாடம் |
|---|---|
| திருமதி யோ.தங்கத்துரை | சமயம் |
| திருமதி யோ.சந்திரராசு | தமிழ் |
| திரு.ம.அரியதாஸ் | சுகா/ உட |
| திரு.அ.சுரேஸ் | குடியுரிமை |
| திருமதி.தி.பிரகாஸ் | கணிதம் |
| திரு.பா.தயாசீலன் | விவசாயம் |
| திருமதி.கு.வசிதரன் | தொடர்.ஊடககல்வி |
| திரு.மா.சத்தியநாயகம் | வரலாறு |

புலமைப் பரிசில் பரீட்சை சிறந்த அடைவு மட்டம்

2010
திருமதி.தே.மேகலநாதன்

2011
திரு.பே.குமாரலிங்கம்

சிறந்த பகுதித் தலைவர் மேற்பிரிவு - திருமதி.சா.பகீரதன்
சிறந்த பகுதித் தலைவர் கீழ்ப்பிரிவு – திரு.அ.இராமேஸ்வரன்

# நவீன கல்வி விடயங்கள்

**பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களும்**
**பாடசாலை அதிபர்களும் கட்டாம் அறிந்திருக்க வேண்டிய சில விடயங்கள்.**
(இவை மிக. மிக சுருக்கமாகவே விளக்கப்பட்டுள்ளது.)

1. கணிப்பீடு என்பது நியதிகளை அளவிடும் பரீட்சையாகும் மாணவர்களின் இயலுமையை அல்லது தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது.
மதிப்பீடு என்பது நியமங்களை அளவிடுவது.

2. மூவகை மதிப்பீடுகள்:-
அ) அமைப்பு மதிப்பீடு ஒரு பாடவேளை முடிவில் அப்பாடத்தில் கற்பிக்கப்பட்ட எண்ணக்கருவை மாணவர் அறிந்து கொண்டனரா என்பதை அறிவதற்காக செய்யப்படும் பரீட்சை.
ஆ) கூட்டு மதிப்பீடு குறிப்பிட்ட ஒரு அலகு முடிவில் அவ்வலகு முழுவதும் கற்பித்த எண்ணக்கருக்கள் முழுவதும் மாணவர்களை சென்றடைந்துள்ளதா என்பதை அறிவதற்கான பரீட்சை.
இ) குறைகாண்/ஆய்ந்தறி மதிப்பீடு ஒரு எண்ணக்கருவை கற்பிக்கும் போது மாணவர்கள் அதனை முழுமையாக அறிந்து கொள்வதில் ஏற்படும் சிரமங்களை கண்டறிவதற்கான பரீட்சை.

3. KASP என்பது:-
K - அறிவு, A – மனப்பாங்கு, S – திறன், P – செயற்பாடு
இம்முறையின் அடிப்படையிலே தற்போது பாடசாலைகளில் 5E மாதிரியல் கற்பித்தல் செயல்பாடுகள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. இது இலங்கையில் Dr. கினிகே என்பவரால் அறிமுகம் செய்யப்பட்டதாகும்.

4. செயல்பாட்டுத்திட்டம் பழைய பாடக்குறிப்பு என்று அழைக்கப்பட்ட விடயம் எனினும் இதில் செயற்பாடுகளுடன் கூடிய கற்பித்தல் முறைகள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

5. SBM (School Base Management) பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவம். இது இலங்கை பாடசாலைகளில் 2000/2001 காலப்பகுதியில் அமுலாக்க முயற்சிக்கப்பட்டது. இதன் கூறுகளில் ஒன்றாகத்தான் தற்போது நடைமுறையில் உள்ள "தரஉள்ளீடு" (Quality Input), ESDFP திட்டங்கள் பாடசாலை நிருவாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இம்முறையானது அவுஸ்திரேலியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

6. உற்படுத்துகைக்கல்வி (Inclusive Education)
அசாதாரண மாணவர்களை, சாதாரண மாணவர்கள் கற்கும் வகுப்புக்களில் கற்பதற்கான நிலைகளை உருவாக்கி சாதாரண வகுப்புக்களில் உள்வாங்கும் கல்வித்திட்டம் வலது குறைந்த, மெல்லக்கற்கும் மாணவர்களை இத்திட்டத்தில் இணைத்து தனியான ஒரு பாடத்திட்டத்தின் மூலம் கற்பித்து சாதாரண மாணவர்களை இத்திட்டத்தில் இணைத்து தனியான ஒரு பாடத்திட்டத்தின் மூலம் கற்பித்து சாதாரண மாணவர்கள் கற்கும் கற்கும் வகுப்புக்களில் கற்க வசதியளித்தல். இத்திட்டத்திற்கு UNICEF நிறுவனம் பெரும் பங்காற்றுகின்றது.

7. Y=AX+b கற்றல் சமன்பாடு
இச்சமன்பாட்டில் Y= வெளியீடு A= செயல்பாடு X= உள்ளீடுகள் b= முன்னறிவு இச்சமன்பாட்டின் மூலம் விளங்கிக் கொள்வது யாதெனில் A என்பது பூச்சியமாகவோ அல்லது X என்பது பூச்சியமாகவோ இருப்பின் விளைவு என்பது முன்னறிவாகவே இருக்கும் ஆகவே கற்றல் மூலம் மாணவன் புது விடயங்கள் எதனையும் அறியாதவனாகவே இருப்பான் எனவே Aயும் Xஉம் எவ்வளவு கூடுதலாக அதிகரிக்கின்றதோ அங்கு வெளியீடு கூடுதலாக அதாவது புது விடயங்களை அறிதல் கூடுதலாக அமையும்.

**8. KWL Table**

ஒரு விடயம் பற்றி கற்றலின் போது இம்முறை பயன்படுத்தப்படுகின்றது இங்கு K = கற்கும் விடயம் பற்றி நாம் அறிந்து வைத்திருப்பது W = கற்கும் விடயம் பற்றி என்ன இன்னும் அறியவேண்டும். L= கற்றலின் பின் என்ன கற்றுக் கொண்டோம். இந்த அட்டவணையை நிரப்புவதன் மூலம் எங்களது கற்றல் செயற்பாட்டை மேன்மை அடையச்செய்யலாம்.

**9. தீர்மானம் எடுப்பதில் உள்ள 4 "ing" கள்**

ஏதாவது ஒரு விடயத்தில் தீர்மானம் எடுக்கும் போது இந்த 4 "ing" களும் பயன்படுத்தப்படுமானால் தீர்மானம் பலம் வாய்ந்ததாக அமையும்.

a) Forming - விடயத்தினை முன் மொழிதல் அல்லது உருவாக்குதல்.

b) Stroming - இந்த விடயம் பற்றிச் சிந்தனையை கிளரவிடுதல் கருத்துக்களை மோதவிடுதல்.

c) Noming - சிந்தனை கிளறல் அடிப்படையிலான கருத்துக்களை கவனத்தில் கொண்டு எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தை முன் வைத்து நியாயப்படுத்தி சமநிலையை உருவாக்குதல்.

d) Performing - முடிவை நடைமுறைப்படுத்தல்.

**10. SMART**

எதனை செய்தாலும் எதனை எழுதினாலும் அவை "SMART" அமைப்பாக இருக்குமானால் அவை வெற்றி பெறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை இங்கு

S = Specific = திட்டவட்டமாக (சரியாக).

M = Messerable = அளவிடக்கூடியதாக.

A = Achieveble = அடையக்கூடியதாக.

R = Relayable = நம்பகத்தன்மையுடையதாக.

T = Time = நேரம், காலம் குறிக்கப்பட்டவையாக.

**11. வழிகாட்டல் வினாக்கள் (Guiding Questions)**

கேள்வி ஒன்றின் போது கேட்கப்படும் இறுதி விடையை நோக்கி வழிப்படுத்தும் வினாக்கள். இது அனேகமாக கணிதம், விஞ்ஞான பாடங்களில் பயன்படுத்தப்படும் குறிப்பாக கணிதத்தில் கேத்திர கணித வினாக்களில் இது பயன்படுத்தப்படும்.

**12. கற்றல் வளம் என்றால்**

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பயன்படுத்தப்படும் போது அதில் காணப்படும் ஊடகம், தகவல், அறிவுறுத்தல் என்பன ஒன்றோடு ஒன்று இடைவினைத்தாக்கம் அடையும் போது மட்டுமே அது கற்றல் வளமாக மாற்றமடைகின்றது.

**13. உள்ளக மதிப்பீடு**

ஒரு நிருவனத்தின் இலக்கை நோக்கி இங்கு கடமையாற்றும் பணியாளர்களை நகர்த்தலும் இலக்கை அடைவதற்கான செயற்திட்டமுமே உள்ளக மேற்பார்வை அல்லது மதிப்பீடாகும்.

**14. அதிபர், ஆசிரியர் தகமைத்திறன் மதிப்பீடு**

இது முழுத்தர முகாமைத்துவத்தின் (Total Quality Management) ஒரு முக்கிய அம்சமாகும். இதன் ஒரு பகுதியான உள்ளக மதிப்பீட்டில் அதிபர், ஆசிரியர் தகமைத்திறன் மதிப்பீடு ஒரு முக்கியவிடயமாகும். இதனை அளவிடுவதற்கு அதிபர்களுக்கு 22 கருவிகளும் ஆசிரியர்களுக்கு முக்கியமாக 08 கருவிகளும் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் அதிபர்கள், ஆசிரியர்கள் தம்மை தாமே சுயமதிப்பீடு செய்து தமது தகமைத்திறனை விருத்தி செய்தல் வேண்டும்.

**15. சித்திர வடிவ ஒழுங்காக்கி (Map or Word Web)**

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் பயன்படுத்தக்கூடிய ஒரு மாதிரி. இதன் மூலம் எளிமையாக மாணவர் பாடத்தை விளங்கிக்கொள்ள முடியும் மாணவர்களும் ஆர்வத்துடன் செயல்படத் தூண்டும். எந்த ஒரு பாடத்திலும் உள்ள தலைப்புகளையும் மீள வலியுறுத்துவதற்கு இதனைப் பயன்படுத்தலாம். இதில் பல வகைகள் உண்டு.

உ+ம் : கார்டன் கேட் (Garden Gate), ஏணி, தொத்தனி வலையமைப்பு, வென்வரிப்படம், ஒப்பிட்டு வேறுபடுத்து.

**16. கற்றல் பேறுகள்**

மாணவர்கள் எதனை செய்யக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். ஒரு அலகை கற்றபின் எதனை தெறிந்திருக்க வேண்டும், அல்லது எதனை மதிக்க வேண்டும். அத்தகைய பெறுபேறுகளை எந்தளவுக்கு அடையவேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கப்பட வேண்டும் என்பன பற்றிய தெளிவான கூற்றுக்கள் கற்றல் பேறு எனப்படும். கற்பித்தல் தொடங்கமுன் கற்றல் பேறுகள் தொடர்பாக ஆசிரியர் திட்டமிடல் சிறந்த கற்பித்தலுக்கான அடித்தளமாகும்.

**17. வகுப்பறை கவி நிலை (Class room Climate)**

கற்றல் கற்பித்தல் செயல்பாட்டை வினைதிறனுடனும் வெற்றிகரமாக செய்து முடிப்பதற்கு ஏற்ற வகையில் வகுப்பறையை ஒழுங்குபடுத்தல் வகுப்பறை கவி நிலை எனப்படும். இதில் பல விடயங்கள் அடங்கியுள்ளன பௌதீகச்சூழல், வகுப்பறை ஒழுங்கு, இடவசதி, வெளிச்சம் போன்றவற்றோடு ஆசிரியர் செயல்பாடுகள். மாணவர்கள் ஆசிரியருடன் சேர்ந்திருக்கக் கூடிய ஊக்கப்படுத்தல் என பல விடயங்கள் அடங்குகின்றன.

**18. Dennis Palmer Wolt இன் "வினாதொடுக்கும் கலை" என்பதில் உள்ள 4 வகை வினாக்கள்.**


a) அனுமான வினாக்கள் (Interence Question)
b) வியாக்கியான வினாக்கள் (Interpretation Question)
c) இடமாற்ற வினாக்கள் (Transfer Question)
d) எடுகோள் பற்றிய வினாக்கள் (Hypotheses Question)

**19. சிந்தி, சோடிசேர் பகிர்வுசெய் (Think, Pair, Share)**

இது ஒரு வகை கற்றல் மாதிரியாகும் மாணவர்களுக்கு ஒரு பிரச்சனையை வழங்கி முதலில் தனியாக சிந்திக்கவிட்டு பின்னர் சோடி சேர்ந்து சிந்திக்கவிட்டு கருத்துக்களை பரிமாறச் செய்து பெறப்படும் சகல விடைகளையும் கொண்டு ஒரு பிரச்சனைக்கான தெளிவான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளல்.

**20. விளைதிறன் மிக்க கற்பித்தலை விருத்தி செய்வதற்கான மாதிரிகை.**

(Dick W. Reiser RA என்பவரால் 1989ல் உருவாக்கப்பட்டது.)





திரு. வ. தெய்வேந்திரன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்)
வலயக் கல்வி அலுவலகம்
மட்டக்களப்பு மேற்கு

## பரிசுப்பொருள் அனுசரனை
### வேள்ட்விஷன் லங்கா
### பட்டிப்பளை பிராந்தியம்

## நன்றியுரை

**"காலத்தினால் செய்த உதவி சிறிதெனினும்**

**ஞாலத்தின் மானப் பெரிது"**

**மட் /ம.மே /முனைக்காடு விவேகானந்தா**

**வித்தியாலயம் நடாத்தும் பரிசளிப்பு விழாவிற்கு**

**தங்களாலான அனைத்து உதவிகளையும்**

**வழங்கியதோடு நிகழ்வில் கலந்து சிறப்பித்த**

**அதிதிகளுக்கும், எம்மோடு சகல வழிகளிலும்**

**ஒத்துழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது**

**பாடசாலையின் சார்பாக மனப்பூர்வமான நன்றிகளைத்**

**தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**-விழாக்குழுச் செயலாளர்-**

# 2011ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்




முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா 2011
சிறப்பாக அமைய எமது நல்வாழ்த்துக்கள்!!

## ஜனன் ஸ்ரோர்

உங்களுக்குத் தேவையான அனைத்து விதமான
மளிகை பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள

பாடசாலை வீதி, முனைக்காடு

முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா 2011
முனைப்பு சிறப்பு மலருக்கு அனுசரணை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

## விஜித் ஸ்ரோஸ்

அனைத்துப் பொருட்களையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள
என்றும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

பிரதான வீதி, முனைக்காடு – வடக்கு

முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா 2011
சிறப்பாக அமைய எமது நல்வாழ்த்துக்கள்!!

## விவேகாந் ஹாட்வெயர்

அனைத்து விதமான கட்டட பொருட்கள், மின் உபகரணங்கள், பெயின்ட் வகைகள்
பீ.வி.சி குழாய்கள் பொருத்துக்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
பெற்றுக்கொள்ள

பிரதான வீதி, முனைக்காடு – வடக்கு

அனுபவமிக்க பணியாளர்களுடன்
அச்சு உலகில் புதியதோர் உதயம்

## டொட்லைன்

டிஜிடல் கிரபிக்ஸ் அச்சகம்

170, பிரதான வீதி, காத்தான்குடி.
தொ.பேசி. இல : 0777 280294

அட்டை வடிவமைப்பும் அச்சுப்பதிப்பும் – டொட்லைன் டிஜிடல் கிரபிக்ஸ் அச்சகம் – 0777 280294